இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*[1991, திசெம்பர் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1991, திசெம்பர் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை : ரூபா 2.40** **தபாற் செலவு : ரூபா 3.35**

# 1991 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[1991, திசெம்பர் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 112/90

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1991 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (LVIII) என்னும் உட்பந்தியில் "சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவின்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவின்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (LIX) என்னும் உட்பந்தியில், "1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின்;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பந்தியின் (LIX) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்—

"(LX) 1991 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதி அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தின்; அத்துடன்"; அத்துடன்

(LXI) 1991 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் ஆராய்ச்சிச் சபையின்." அத்துடன்

2—டீ016052—1,670 (09,91)

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (iv) என்னும் உட்பந்திக்குப் பதிலாக பின் வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

"(iv) ஒரு வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறின் கரைகடந்த எல்லாக் கொடுக்கல் வாங்கல்களிலு மிருந்து எழுகின்ற வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறொன்றின்.

இவ்வுட்பந்தியின் நோக்கங்களுக்காக, 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறானது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறுடன் செய்துகொள்ளும் ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல் கரைகடந்த கொடுக்கல்வாங்கல் என்று கருதப் படுதல் வேண்டும்.";

(ஆ) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின் வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

"(v) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறின் கரைக்குட்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து நாட்டிற்கு வந்தறக்கூடிய சாத்தியமுடைய வெளிநாட்டுச் செலாவணி நலன்களைக் கருத்திற் கொண்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய் கரைக்குட்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறொன்றின்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின் வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்—

"(iiiஅ) ஏதேனும் மாகாண சபையின் ஊழியர் ஒருவரின் அல்லது மாகாணப் பகிரங்கச் சேவையொன்றின் அலுவலர் ஒருவரின்;"

(ஆ) அப்பந்தியின் (ix) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்—

"(x) அரசியலமைப்பின் 154ஆ என்னும் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட மாகாணமொன்றுக்கான ஆளுநரின்;

(xi) ஏதேனும் மாகாண சபையின் எவரேனும் உறுப்பினரின்,";

(இ) "விடயங்கள் (i), (ii), (iii), (iv) (v), (vi) (vii), (viii) அல்லது (ix) என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "உட்பந்தி (i), (ii), (iii), (iiiஅ), (iv), (v), (vi), (vii), (viii), (ix), (x) அல்லது (xi) என்பதில் குறிப்பிடப்பட்டவாறான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்திக்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:–

"(ஔ) தனியாள் ஒருவரால் அல்லது எந்தப் பிள்ளையின் மொத்த நியதிச்சட்ட வருமானம் அந்தத் தனியாளின் வருமானத்துடன் கூட்டுமொத்தமாக்கப்படுகின்றதோ அந்தப் பிள்ளையால் தொழில் தவிர்ந்த வேறு எல்லா மூல வளங்களிலுமிருந்து பெறப்பட்ட அல்லது அத்தனியாளுக்கு அல்லது அப்பிள்ளைக்குக் கிடைக்கின்ற அல்லது திரளுகின்றதான;

(அ) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆயிரத்து இருநூறு ரூபா; அத்துடன்

(ஆ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இரண்டாயிரத்து நானூறு ரூபா;

அதாவது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அந்தத் தனியாளின் மொத்த நியதிச்சட்ட வருமானம் பின்வருவனவற்றை மட்டும் கொண்டிருப்பின் –

(i) தொழிலிலிருந்து பின்வருவனவற்றை விஞ்சாத இலாபங்களும் வருமானமும்—

(அ) 1979 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் முப்பதாயிரம் ரூபா;

(ஆ) 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபா;

(இ) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1991 ஏப்பிறில் மாதத்திற்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்தையாயிரம் ரூபா;

(ஈ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபா; அத்துடன்

(ii) தொழில் தவிர்ந்த வேறு இலாபங்களையும் வருமானத்தையும் கொண்ட எல்லா மூலவளங்களிலுமிருந்து பின்வருவனவற்றை விஞ்சாத இலாபங்களும் வருமானமும் —

(அ) 1991 மார்ச் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆயிரத்து இருநூறு ரூபா; அத்துடன்

(ஆ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இரண்டாயிரத்து நானூறு ரூபா;

அத்துடன் அதற்கிணங்க, இப்பந்தியின்கீழ் விதிவிலக்களிக்கப்பட்ட எவையேனும் இலாபங்களும் வருமானமும் தொடர்பில் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய தனியாளினால் கழிப்பனவு மூலம் அல்லது வேறுவகையாக ஏதேனும் வருமானவரி செலுத்தப்பட்டுள்ளவிடத்து அத்தகைய வரி அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் அத்தகைய ஆளினால் அதன்பொருட்டு எழுத்திற் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது அவருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு" என்னும் சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பந்தியின் (xvii) (ஆ) என்னும் உட்பந்தியில் "17உ ஆம் பந்தியில் என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக "17 ஊ என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (xix) என்னும் உட்பந்தியில் "22ஈஈஈ ஆம் பிரிவிற் குறிப்பீடு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "22ஈஈஈஈ ஆம் பிரிவிற் குறிப்பீடு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (இஇஇ) என்னும் பந்தியில் அப்பந்தியின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:—

"இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வாழ்க்கைத் தொழில்" என்பது இலக்கிய அல்லது நுண்கலைத் துறையில் வாழ்க்கைத் தொழிலொன்று எனப் பொருள்படும்";

(2) அப்பிரிவின் (v) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை சேர்ப்பதன் மூலமும்:—

(ய) எவரேனும் ஆளினால் அத்தகைய ஆள் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியெதிலும் பங்கு எதுவும் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டின்பின்னர், ஆனால் 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் விற்பனையிலிருந்து பெறப்பட்டதும் அல்லது அவருக்கு எழுகின்றவையும், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்கு உட்பட்டவையுமான எவையேனும் இலாபங்களும் வருமானங்களும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17இ என்னும் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "பொறுப்பு முயற்சியொன்றை; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொறுப்பு முயற்சியொன்றை," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "பொறுப்பு முயற்சியொன்றைக் கொண்டுநடாத்துவதில் மாத்திரம் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "பொறுப்பு முயற்சியொன்றை அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை அதன் காப்பு வாசகத்துக்கு முன்னர் இடுவதன் மூலமும்:—

(iii) இலங்கையில் தொலைத்தொடர்புச் சேவையின் அபிவிருத்திக்கும் அதனை ஏற்பாடு செய்வதற்கும் கணனி தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட புது வழிக் காண்டலின் தன்மையிலான பொறுப்பு முயற்சியொன்றை

கொண்டுநடாத்தும் ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஊ என்னும் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) "இப்பிரிவின் நோக்கங்களுக்காகவும் ஏதேனும் தொழிற் பொறுப்பு தொடர்பாகவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இப்பிரிவின் நோக்கங்களுக்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "புதிய மூலதனச் செலவினம் அல்லதெனக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "புதிய மூலதனச் செலவினம் அல்லதெனக் கருதப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்—

"(ஈ) பண்டங்களின் அல்லது வியாபாரப் பொருட்களின் தயாரிப்பு அல்லது உற்பத்தியானது பழங்களை, காய்கறிகளை, பூக்களை அல்லது அலங்காரச் செடிகளைப் பயிரிடுதலையும் உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17எ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17எ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

"குறித்த சில ஓம்னி வசு வண்டிகளின் இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுதல்.

17எ. (1) பயணிகளை இடம்பெயர்ப்பதற்கான ஏதேனும் பொறுப்புமுயற்சியின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட ஓம்னி வசு வண்டித் தொழிற்பாட்டிலிருந்து வரும் இலாபங்களும் வருமானமும் 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்துவரும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லாத) எத்தகைய பாகத்தை உள்ளடக்கியதாக இருக்கின்றனவோ அத்தகைய பாகம், அந்த ஓம்னி வசுவண்டி மோட்டார் வாகனப் பதிவாளரால் முதலாவதாகப் பதிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

(i) "குறித்துரைக்கப்பட்ட ஓம்னி வசு வண்டி" என்பது

(அ) புதிதாகவுள்ள;

(ஆ) 1990 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் ஆனல் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் மோட்டார் வாகனப் பதிவாளரால் முதலாவதாகப் பதியப்பட்டதாக; அத்துடன்

(இ) சாரதி புறநீங்கலாக முப்பது ஆட்களுக்குக் குறையாதவர்களுக்கான ஆசன வசதியுடையதாகவுள்ள ஏதேனும் வசுவண்டி என்று பொருள்படும்.

(ii) பயணிகளை இடம் பெயர்ப்பதற்கான ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு

தொடர்பிலும் "ஏதேனும் குறித்துரைக் கப்பட்ட ஓம்னி வசுவண்டியின் தொழிற்பாட்டிலிருந்தான இலாபங் களும் வருமானமும்" என்பது உறுப்பி னர் ஒவ்வொருவரும் பொதுச் சேரிட மொன்றுக்கு அல்லது சேரிடங் களுக்கு; அத்தகைய சேரிடம் அத்த கைய கூட்டத்தால் தீர்மானிக்கப் பட்டிருப்பினும்சரி அல்லாவிடினுஞ் சரி, விநோதத்திற்கு, காட்சிகளை கண்டு களிப்பதற்கு, சமய அல்லது வேறு ஆசாரங்களை நிறைவேற்றுவதற்கு இடம்பெயர்க்கப்படுகின்றூரோ அந்தப் பயணிகளின் ஏதேனும் கூட்டத்தை இடம்பெயர்ப்பதிலிருந்தான எவை யேனும் வரவுகளைத் தவிர்த்து பயணி களை இடம்பெயர்ப்பதிலிருந்து அப் பொறுப்புமுயற்சியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர்த்து) பயணிகளை இடம்பெயர்ப் பிலிருந்து அப்பொறுப்புமுயற்சியின் இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ள னவோ அந்த விகிதாசாரத்தை அந்த ஓம்னி வசுவண்டியினுல் பயணிகளை இடம்பெயர்ப்பதிலிருந்தான முழு மொத்த வரவுக்குக் கொண்டுள்ள பணத்தொகை என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 17ஏ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்தல்.*

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17எ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 17ஏ என்றூற்போன்று பயனுறுதலும் வேண்டும்:

*"ஏதேனும் புதிய அல்லது புனரமைக்கப்பட்ட சினிமாவின் இலாபங்களும் அல்லது வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.*

17ஏ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய் யப்பட்ட ஏதேனும் புதிய அல்லது புனரமைக்கப் பட்ட சினிமா மண்டபத்தில் ஏதேனும் சினிமா திரைப்படக் காட்சியிலிருந்து (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சி யின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத் தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (மூல தனச் சொத்தின் விற்பனையிலிருந்து வரும் எவை யேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) அத்தகைய சினிமா மண்டபத்தில் சினிமா திரைப்படக் காட்சித் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து கணிக்

கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் ஏதேனும் பொறுப்புமுயற்சிக்கு ஏற்புடையன வாதல் வேண்டும் :—

(அ) 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர்—

(i) எந்தச் சினிமா மண்டபத்தில் நிர் மான வேலை 1991 சனவரி 1 ஆம் தேதி யன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கப்பட்டுள்ளதோ; அல்லது

(ii) எந்தச் சினிமா 1983 யூலை 23 ஆம் தேதி யன்று அல்லது அதன்பின்னர் கலவரத் தினால் அல்லது குடியியல் கொந்தளிப் பினால் அழிக்கப்பட்டுள்ளதாக புன ரமைப்பு, புனர்நிர்மாணம், சமூக நலன் என்னும் விடயத்துக்குப் பொறுப்பா யுள்ள அமைச்சரின் அமைச்சுச் செய லாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அத்துடன் அதன் புனரமைப்பு அல் லது புனர்நிர்மாணவேலை 1991 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கப் பட்டதோ

அந்தச் சினிமா மண்டபத்தில் சினிமா திரைப்படக் காட்சித் தொழிலைத் தொடங் கும் ஏதேனும் பொறுப்பு முயற்சி; அத்துடன்

(ஆ) இப்பிரிவு எந்தப் பொறுப்பு முயற்சிக்கு ஏற் புடையதாகின்றதோ அந்தப் பொறுப்பு முயற்சியொன்றாக கசெற்றில் வெளியிடப் படும் கட்டளையினால் அமைச்சரால் அங்கீகரிக் கப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சி.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இப்பிரிவின் நோக் கங்களுக்காக, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச் சரால் அங்கீகரிக்கப்பட்டதும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "1990 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்கியதும், இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளி யிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும்," என்னும் சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22உ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 22உ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "20 ஆம் பிரிவின்கீழ் அல்லது 22இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22ஈ என்னும் பிரிவின் கீழ் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கம்பனி அல்லது பொறுப்பு முயற்சியானது எந்தத் தேதியில் விடயத்திற் கேற்றாற்போன்று அத்தகைய கம்பனியை அல்லது பொறுப்பு முயற்சியை அமைச்சர் அங்கீகரித்துள்ளாரோ அந்தத் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக் காலப்பகுதிக்கு அலுவலைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென; அல்லது" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "17அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 17ஈ என்னும் பிரிவின்கீழ் அல்லது 20ஆம் பிரிவின்கீழ் அல்லது 22இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22ஈஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈஈஈ என்னும் பிரிவின்கீழ் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கம்பனி அல்லது பொறுப்பு முயற்சியானது எந்தத் தேதியில் விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய கம்பனியை அல்லது பொறுப்புமுயற்சியை அமைச்சர் அங்கீகரித்துள்ளாரோ அந்தத் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக் காலப்பகுதிக்குள் விடயத்திற்கேற்றவாறு அலுவலைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென அல்லது 17ஊ என்னும் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியானது அதன் உற்பத்திப்பெருக்கத்தின் ஆற்றலை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்திருக்கவில்லையென, அல்லது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "16, 16அ, 16ஆ, 20, 22அ, 22ஆ, 22இ, அல்லது 22ஈ என்னும் பிரிவின்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "16, 16அ, 16ஆ, 17அ, 17இ, 17ஈ, 20, 22அ, 22ஆ, 22இ, 22ஈ, 22 ஈ ஈ ஈ அல்லது 22ஈஈஈஈ என்னும் பிரிவின்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஓ) (i) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வியாபார மொத்த விற்பனவு வரவு வரி;

(ii) 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க மொத்த விற்பனவு வரவு வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்தவிற்பனவு வரவுவரி, அச்சட்டத்தின் 47 ஆம் அல்லது 48 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கக்கூடியனவான எவையேனும் கழிவுகளைக் கழித்து; அல்லது

(iii) எந்த வரிக்கு நேரொத்த முறையே (i) ஆம் (ii) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபார மொத்த விற்பனவு வரவு வரியின் அல்லது மொத்த விற்பனவு வரவு வரியின் தன்மையிலுள்ளதாகவும் ஏதேனும் மாகாண சபையால் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்தின் கீழ் 1991 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற்பாலதாக உள்ளதோ அந்த வரி;

ஆயினும் ஏதேனும் வரிமதிப்பீடு செய்யப்படும் நேரத்தில் அவ்வாறு செலுத்தப்படற்பாலதான ஏதேனும் அத்தகைய வரி செலுத்தப்பட்டிருக்கவில்லையென வரிமதிப்பீட்டாளரொருவருக்குத் தோன்றுகின்றவிடத்து, அவர் அத்தகைய வரி தொடர்பில் ஏதேனும் கழிவை அனுமதிக்க மறுக்கலாம் :

ஆயினும் மேலும் எந்த வரி தொடர்பில் கழிப்பனவொன்று மறுக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் வரி அத்தகைய மதிப்பீடு எந்த வரி மதிப்பீட்டாண்டு தொடர்பானதோ அந்த வரி மதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து ஆறு வருடக்காலப் பகுதியினுள் செலுத்தப்பட்டுள்ளதென வரி மதிப்பீட்டாளரொருவருக்குத் தோன்றுமிடத்து அவர், அத்தகைய கொடுப்பனவு செய்யப்பட்ட பன்னிரண்டு மாதங்களுக்குள்ளும் அத்துடன் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய எண்பிப்பு கொடுத்துதவப்படுவதன்மீதும் எழுத்திலான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மேல், 123 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய கழிப்பனவை அனுமதித்து திருத்தப்பட்ட வரி மதிப்பீடொன்றைச் செய்யலாம்; அத்துடன் அத்தகைய திருத்தப்பட்ட வரி மதிப்பீட்டின் விளைவொன்றாக மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளதாகக் காணப்பட்ட ஏதேனும் வரி 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(த) அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியாபாரத்தை, வர்த்தகத்தை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத்தொழிலை முகாமை செய்வதற்கு மதிபலனாக—

(i) ஒரு மில்லியன் ரூபா அல்லது அத்தகைய ஆளின் இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப்பகுதிக்கு ஆய்ந்தறியப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின்போது அத்தகைய வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின், இலாபங்களதும் வருமானங்களதும் மொத்த விற்பனை வரவின் ஒரு சதவீதம் என்பவற்றுள் எது குறைவானதோ அது; அல்லது

(ii) எல்லாச் சந்தர்ப்பங்களையும் கவனத்திலெடுக்கும்போது மதிபலன் வர்த்தக ரீதியாக நியாயமானதாகவும் சட்ட பூர்வமானதாகவும் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை

அவற்றுள் எது கூடியதோ அதனை விஞ்சியதான ஏதேனும் முயற்சி மூலதனக் கம்பெனி ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பரநிதியம் எதுவுமாக அல்லாத அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில், "மொத்த விற்பனை வரவு" என்னும் சொல்லமைப்பு, அக்காலப்பகுதியின்போது அத்தகைய வர்த்தகத்தை, வியாபாரத்தை, தொழிலை, உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத்தொழிலைக் கொண்டு நடாத்துவதில் அல்லது பிரயோகிப்பதில் (மூலதனச் சொத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை புறநீங்கலாக) செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து அல்லது புரியப்பட்ட சேவைகளிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான மொத்தத்தொகை என்று பொருள்படும்".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "உறப்பட்ட (மூலதன நட்டம் அல்லாத அல்லது (7) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் அல்லாத) எந்த நட்டத்தொகையானது" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "உறப்பட்ட (மூலதன நட்டம் அல்லாத அல்லது (7) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் அல்லது (7அ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு நட்டம் அல்லாத) நட்டத்தொகையானது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "17அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஆ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22இ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈஈ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "17அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17ஆ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17இ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17ஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17எ என்னும் பிரிவின் கீழ் அல்லது 17ஏ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஆ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22இ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈ என்னும் பிரிவின்

கீழ் அல்லது 22ஈஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈஈஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஈஈஈஈ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(7அ) 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஆளொருவரின் மொத்த நியதிச் சட்ட வருமானம் கரைக்குட்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களினின்றெழுவனவும் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்கப்படாதனவுமான ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் கூறின் இலாபங்களையும் வருமானங்களையும் உள்ளடக்குமிடத்து; அத்தகைய மொத்த நிதியச்சட்ட வருமானத்திலிருந்து, அத்தகைய வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறினால் கரைக்குட்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களினின்று உறப்பட்டவையும், இலாபமொன்றாக இருந்திருப்பின் இச்சட்டத்தின் கீழ் வரிமதிப்பிடப்படற்பாலதாயிருப்பதும் அத்துடன் முந்திய ஆண்டொன்றின் அவரது மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து அவ்வாறு கழிக்கப்பட்டிராததுமான, 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான ஏதேனும் நட்டம் கழிக்கப்படுதல் வேண்டும் :

ஆயினும் அத்தகைய கழிப்பனவு, எதுவிடயத்திலும் அத்தகைய மொத்த நிதியச்சட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்டதான அத்தகைய வெளிநாட்டு நாணய தொழிற்கூறின் இலாபங்களினதும் வருமானத்தினதும் தொகையை விஞ்சுதலாகாது என்பதுடன் கூடுமானவரை முதலாவது வரிமதிப்பீட்டாண்டிற்கும் அதன் பின்னர் நட்டம் உறப்பட்ட ஆண்டிற்கும் அத்தகைய ஆளின் மொத்த நிதியச் சட்ட வருமானத்திலிருந்தும் கழிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு செய்யப்பட முடியாதவரை அப்பொழுது அடுத்துறும் ஆண்டின் மொத்த நிதியச்சட்ட வருமானத்திலிருந்தும் என்ற அடிப்படையில் அவ்விதமாக கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அப்பந்தியின் (vii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(viii) மாகாண சபையொன்றினல் தாபிக்கப்பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட நிதியமொன்றுக்கு.". அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் அப்பந்தியில் (x) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(xi) 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க ஜே. ஆர். ஜயவர்த்தன நடுநிலையச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஜே. ஆர். ஜயவர்தன நடுநிலையத்திற்கு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) பணத்தொகையொன்றின் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவாறுன அத்தகைய பாகத்தைத் தவிர ஓய்வுபெறும் பணிக்கொடையொன்ருக பெறப்பட்ட பணத்தொகை ஒன்று, அல்லது" அத்துடன்

(2) அப்பிரிவின் (3ஆஆ) என்னும் உட்பிரிவில் :—

(i) "ஆளொருவரின் வரிவிதிக்கற்பாலதான வருமானமானது அத்தகைய ஆளினல் அத்தகைய பங்கு கொள்ளப்பட்ட தேதியின் பின்னர் ஓராண்டுக்காலப் பகுதியொன்றுக்குள் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனி எதிலும் ஏதேனும் பங்கின் சொத்தாண்மையினது மாற்றத்தினின்றெழும் ஏதேனும் மூலதன ஆதாயத்தை' உள்ளடக்குமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆளின் வரிவிதிக்கற்பாலதான வருமானமானது அத்தகைய ஆளினல் அத்தகைய பங்கு கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்காலப் பகுதிக்கு அல்லது அதற்குக் குறைவானதான காலப்பகுதிக்கு அத்தகைய ஆள்கொண்டிருந்ததான பங்கொன்ருக விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியெதிலும் ஏதேனும் பங்கின்

(அ) சொத்தாண்மையானது மாற்றத்தினின்று ஏதேனும் மூலதன ஆதாயத்தை; அல்லது

(ஆ) விற்பனையிலிருந்து, 1994 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் மூலதன ஆதாயத்தை

உள்ளடக்குகின்றவிடத்து" அத்துடன்

(ii) அவ்வுட்பிரிவின் பந்தி (அ) என்பதன் (ii) ஆம் உட்பந்தியில் "அதற்கு ஏற்புடைத்தாகின்றவாறு பத்துசத வீதத்திற்கு மேற்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக "அதற்கு ஏற்புடைத்தாகின்றவாறு இருபதுசத வீதத்திற்கு மேற்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஈஈ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 32ஈஈ என்னும் பிரிவு என்றுற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

"ஏதேனும் வெளிநாட்டு வங்கித் தொழிற் கூறின் இலாபங்கள் மீது வருமானவரி வீதம்.

32ஈஈ. கரைக்குட்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கலிலிருந்து 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுகின்ற ஏதேனும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறின் இலாபங்களும் வருமானமும் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணான எது எவ்வாறிருப்பினும் பதினைந்து சதவீதப்படி வருமான வரிக்குப் பொறுப்பாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உ என்னும் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உ என்னும் பிரிவு அப்பிரிவில் "1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களும் இலக்கங்களும் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1990 ஏப்பிறில் 1 ஆம் தேதி தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்தல்.

20. பின்வரும் பிரிவு, 32உ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"1991 ஏப்பிறலில் அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப் பீண்டாண்டிற்கு ஊழியத்திலிருந்தான இலாபங்களின்மீது வரிக்கெதிரான வரி வரவு.

32உஉ. அறுபத்தேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் தனியாள் ஒருவர் தவிர்ந்தவரும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்தத் தனியாளுடைய வரிமதிப்பிடற்பாலதான வருமானம் தொழிலிலிருந்து இலாபங்களை உள்ளடக்குகின்றவரு மான அந்த எவரேனும் தனியாளினால் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தற்படற்பாலதான வருமான வரியிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாவிற்குச் சமமான ஒரு தொகை அல்லது ஊழியத்திலிருந்து இலாபங்களுக்கு ஏற்றிக்கூறற்படற்பாலதான வருமான வரித்தொகை என்பனவற்றுள் எது குறைவானதோ அது கழிக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு எவரேனும் தனியாளின் ஊழியத்தி லிருந்து ஈட்டப்படும் இலாபங்களுக்கு ஏற்றிக்கூறப் படற்பாலதான வருமான வரியின் தொகையானது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்காக அந்தத் தனியாளின் ஊழியத்திலிருந்தான இலாபங்கள் 32 (2) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகையைக் கொண்டதான அத்தகைய இலாபங்க ளின் அத்தகைய பாகத்தைத் தவிர (அந்தத் தனி யாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திற்கு 32(2) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையைக் கொண்டதான வரி மதிப்பிடற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தைத் தவிர) என்ன விகிதாசாரத்தைக் கொண் டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் அந்த வரிமதிப் பீட்டாண்டிற்கு அத் தனியாளினுல் செலுத்தற் பாலதான வருமான வரிக்கு (இச்சட்டத்தின் முத லாம் அட்டவணையின் பாகம் IV என்பதில் குறித் துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் அறவிடப் பட்டவாருன அத்தகைய வரியின் அத்தகைய பாகத் தைத் தவிர) எந்த பணத்தொகை கொண்டுள்ளதோ அந்த பணத்தொகையாதல் வேண்டும்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவில் "32 ஆம் பிரிவின் (3அ) அத்துடன் (3ஆ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களுக்கும் இலக் கங்களுக்கும் பதிலாக, "32 ஆம் பிரிவின் (3அ) (3ஆ) அத்துடன் (3ஆஆ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களேயும் இலக்கங்களேயும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியில் "அத்தகைய கணக்கில் அவரது வரவிலிடப்பட்டுள்ள பணங்கள்" என்னும் சொற்களுக் குப் பதிலாக "அத்தகைய கணக்கில் அவரது வரவிலிடப்பட் டுள்ள பணங்கள்;" என்னும் சொற்களே இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ய) விலேகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம் பெனி எதிலும் அத்தகைய ஆள் கொண்டிருக்கும் ஏதே னும் பங்கு.".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் "ஒரு பங்குடைமையின் முந்திய பங்காளி" என்பதி லிருந்து "குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய படிவத் தில்" என்பது வரையிலான சொற்களே நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வருவதனே இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஒரு பங்குடைமையின் முந்திய பங்காளி அல்லது தீவிர பங்காளர் இலங்கையில் இல்லாதவிடத்து, அப்பங்குடைமையின் இலங்கையிலுள்ள முகவர்,

(அ) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டின் யூலை, ஒற்றோபர், சனவரி முப்பத் தோராந் தேதியன்றும் அல்லது அதன் முன்னரும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து முடிவடையும் மதிப் பீட்டாண்டு தொடர்பில் செத்தெம்பர் முப்பதாம் தேதியன்றும் அல்லது அதற்கு முன்னரும் ஒவ்வொரு பங்காளருக்கு அல்லது பங்குடைமைக்கும்; அத்துடன்

(ஆ) 1991 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டின் யூலை, ஒற்றோபர், சனவரி முப்பத் தோராந் தேதியன்றும் அல்லது அதற்கு முன்னரும், அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து முடிவடையும் மதிப் பீட்டாண்டு தொடர்பில் செத்தெம்பர் முப்பதாம் தேதியன்றும் அல்லது அதற்கு முன்னரும் அப் பங்குடைமையின் ஒவ்வொரு பங்காளருக்கும்

குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஓர் அறிவித் தல் கொடுத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவைத் திருத்துதல்.*

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "வதிவற்ற ஆளொருவரின் இலாபங்களாக அல்லது வருமான மாக அவ்வாள் பெறும் பணத்தொகை எதுவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1990 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வதிவற்ற ஆளொருவரின் இலாபங்களாக அல்லது வருமானமாக அவ் வாள் பெறும் பணத்தொகை எதுவும்" என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன் மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்தல்.*

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவு என்றுற்போன்று பயனுறுத லும் வேண்டும்:—

"இலங்கை வருமான வரி தொடர்பில் நிவாரணம்.

84 அ(1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடை மையின் எவரேனும் பங்காளர் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது வருமானம் தொடர்பில் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல் லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு இலங்கையில் வருமான வரியையும் நேரொத்த காலப் பகுதிக்கு வேறு ஏதேனும் நாட்டில் வருமான வரியையும் செலுத்தியுள்ளாரென அல்லது செலுத்தும் சாத்தியமுள்ளது என ஆணையாளர் தலை மையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்குமிடத்து அப்போது, அத்தகைய ஆள் அத்தகைய ஆளினால்

இலங்கையில் செலுத்தற்பாலதான வருமான வரியிலிருந்து, அத்தகைய வருமானம் தொடர்பில் நேரொத்த காலப்பகுதிக்கு அத்தகைய வேறு நாட்டில் அவரால் செலுத்தற்பாலதான வருமான வரிக்கு மேலாக அத்தகைய வருமானம் தொடர்பில் (இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நிவாரணம் வழங்கப்படுவதற்கு முன்னர்) அத்தகைய ஆளினால் இலங்கையில் செலுத்தற்பாலதான வருமான வரியின் மிகை ஏதேனுமிருப்பின் அதற்குச் சமமான தொகையைக் கொண்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்ட துறைகளில் இலங்கையில் முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குகின்றவரும் அல்லது வழங்குவதும், வதிவற்றவருமான எவரேனும் ஆளுக்கும் அல்லது இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்டதுமான ஏதேனும் பங்குடைமைக்கும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குவதினின்று 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் எழுகின்ற அல்லது ஈட்டப்படுகின்ற இலாபங்களினதும் வருமானங்களினதும் தொடர்பிலும்

ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையின் எவரேனும் பங்காளரினால் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் தொடர்பில் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் செலுத்தற்பாலதான வருமான வரியானது, விடயத்திற்கேற்ப இலங்கையில் அல்லது அத்தகைய வேறு நாட்டின் வருமான வரியின் நோக்கங்களுக்காக ஆய்ந்தறியப்பட்ட வரிவிதிக்கற்பாலதான அவரது வருமானம் தொடர்பில், விடயத்திற்கேற்ப இலங்கையில் அல்லது அத்தகைய வேறு நாட்டில் (இப்பிரிவின் கீழ் ஏதேனும் நிவாரணம் வழங்கப்படுவதற்கு முன்னர்) அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காளரால் செலுத்தற்பாலதான வருமான வரியை பிரித்து வரும் ஈவுக்குச் சமமான வீதப்படி கணிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவு "20(1) ஆம் பிரிவில் அல்லது" என்பது முதல் "உரித்துடையதாதல் வேண்டும்" என்பது வரையிலான சொற்கள் மற்றும் இலக்கங்கள் எல்லாவற்றிற்கும் பதிலாக, பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:—

"20 (1) ஆம் பிரிவில் அல்லது 20அ (1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றின் ஏற்றுமதி மொத்த விற்பனை வரவிலிருந்து ஆளொருவரின் தேறிய வெளிநாட்டு செலாவணிச் சம்பாத்தியங்கள்—

(அ) ஏற்றுமதி அபிவிருத்திச்சபையினால்—

(i) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டின் விடயத்தில் எழுபத்தைந்து சதவீதம் ஆகும் எனவும் அத்துடன்,

(ii) 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் ஐம்பது சதவீதம் ஆகும் எனவும் அல்லது

(ஆ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் இருபத்தைந்து சதவீதம் ஆகும் எனவும்

அல்லது எந்த கடைசி ஆண்டிற்கு அந்த ஆளின் இலாபங்கள், வருமானம் முழுவதும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகம் அப்பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக்கடைசி ஆண்டை உடனடுத்துறுவதான—

1987 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் பத்து ஆண்டுகளை, அல்லது

1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் ஐந்து ஆண்டுகளைக்

கொண்டவொரு காலப்பகுதிக்கு ஒவ்வோராண்டிற்குமான அத்தகைய ஏற்றுமதிகளின் பெறுமதிக்கும் (கேழ்வு காப்புறுதி என்பவற்றை இறுக்கு முன்னர்) அதிகமானதென சான்றுப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள், மேலே குறிப்பிடப்பட்ட பத்து அல்லது ஐந்து ஆண்டுகளெதற்குமான ஏற்றுமதி இலாபங்கள் மற்றும் வருமானம் மீது அவரால் செலுத்தற்பாலதான வருமான வரியிலிருந்து, குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையின் ஐம்பது சதவீதத்திற்குச் சமமான பணத்தொகையொன்றின் கழிப்பனவொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயினும், 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அமைச்சரானவர், 20(1) ஆம் பிரிவில் அல்லது 20அ(1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட ஏதேனும்பொறுப்பு முயற்சியின் ஏற்றுமதி மொத்த விற்பனை வரவிலிருந்து எவரேனும் ஆளின் அத்தகைய தேறிய வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியங்கள் கணிக்கப்பட வேண்டிய முறையை கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் குறித்துரைக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 92அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையிலான சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

"எந்த வரிமதிப்பீட்டாண்டிற்கென அல்லது எந்தக் காலப் பகுதி தொடர்பில், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான நியதிச் சட்ட வருமானம் கணிக்கப்படுகின்றதோ அந்தக்காலப் பகுதி தொடர்பில் அத்தகைய வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் கணக்குகள் பற்றிய கூற்றொன்றையும் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விவரங்கள் கொண்ட எவையேனும் அட்டவணைகளையும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கெனக் கொடுத்துதவுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தி எழுத்திலான அந்த அறிவித்தலைக் கொடுக்கலாம்:

ஆயினும், அத்தகைய வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் மொத்த விற்பனை வரவு 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது அத்தகைய வர்த்தகத்தின் வியாபாரத்தின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் நியதிச்சட்ட வருமானம் எந்தக் காலப்பகுதி தொடர்பில் கணிக்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதிக்கு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய பங்காளர் அல்லது அத்தகைய ஆள் இப் பிரிவின்கீழ் அவருக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டிருக்கவில்லையென்பது எவ்வாறிருப்பினும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு அல்லது காலப்பகுதி தொடர்பில் கணக்குகளின் கூற்றையும் அத்தகைய அட்டவணைகளையும் கொடுத்துதவுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியில், "சேர்த்தனுப்பப்படவேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சேர்த்தனுப்பப்பட வேண்டும் :

ஆயினும் ஏதேனும் வர்த்தகத்தின் வியாபாரத்தின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் மொத்த விற்பனை வரவு 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது அத்தகைய வர்த்தகத்தின் வியாபாரத்தை, உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் நியதிச்சட்ட வருமானம் எந்தக் காலப்பகுதி தொடர்பில் கணிக்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதிக்கு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய வர்த்தகத்தை வியாபாரத்தை, உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளினால் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது காலப்பகுதிக்குக் கொடுத்துதவப்படும் கணக்குகள் பற்றிய கூற்று அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரால் தயாரிக்கப்படல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(i) "அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்" என்பது

(அ) இலங்கையின் வரைவு பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவுள்ள கணக்காளர் ஒருவர் ;

(ஆ) "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பதன் வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவரான கணக்காளர் ஒருவர் ; அல்லது

(இ) கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்கு விதிகளின்கீழ் கணக்காளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டு "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பதன் வரைவிலக்கணத்தின் நோக்கத்திற்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவரான எவரேனும் தனியாள் என்று பொருள்படும் ; அத்துடன்

(ii) ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில் "மொத்த விற்பனை வரவு" என்பது, அத்தகைய வர்த்தகத்தை வியாபாரத்தை, உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துகையில் அல்லது பிரயோகிக்கையில் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து அல்லது புரியப்பட்ட சேவைக்கா

கப்பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான மொத்தத் தொகை (மூலதனச் சொத்துக்களின் விற்பனையினின்று) பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை புறநீங்கலாக என்று பொருள்படும்.".

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 99 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : முதன்மைச் சட்டவாக்கத்தின் 99ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107இ(1) என்னும் பிரிவின்கீழ் அல்லது இச்சட்டத்தின் இந்த அத்தியாயத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தில்லாதவரும், அத்துடன்

(அ) மாதமொன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேல் அல்லது ஆண்டொன்றுக்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவுக்குமேல் ஊதியம் பெறுகின்றவரான தனியாளொருவரை ; அல்லது

(ஆ) இலங்கையில் வழங்கப்பட்ட சேவைகளுக்கு ஊதியமாக மாதமொன்றுக்கு எண்பத்தைந்து ரூபாவுக்கு மேல் அல்லது ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குமேல் ஊதியம் பெறுகின்றவரான வதிவற்ற தனியாள் எவரையும்,

ஊழியத்துக்கமர்த்துகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் அவரது ஊழியத்தில் (இந்த அத்தியாயத்தில் இதனகத்துப்பின்னர் "குறிக்கப்பட்ட தொழில் பெறுநர்" ஒருவரெனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தனியாளை அவர் வைத்திருக்கின்றாரென 1992 மார்ச், 15ஆம் தேதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.".

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 109ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 109ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2அ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு உட்பட்ட ஏதேனும் கொடுப்பனவுக் காலப்பகுதிக்கு மதிப்பீடொன்றின் தொகைக்கு எதிராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றை முன்வைக்கும் தொழில்தருநர் ஒவ்வொருவரும் (அத்தகைய தொழில்தருநர் ஏற்கனவே அவ்வாறு செய்திருந்தாலன்றி) அத்தகைய கொடுப்பனவுக்காலப்பகுதி தொடர்பில் அவரது ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ஊதியத்திலிருந்து கழிப்பனவு செய்து அதனை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டுமென்று இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தொழில் தருநர் தேவைப்படுத்தப்பட்டு ஆனால் அங்ஙனம் அனுப்பாதுள்ளதுமான வருமான

வரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, அத்தகைய மதிப்பீடுபற்றிய தேதிவரை திரண்ட 110 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அனுப்புகையின் எண்பிப்பாக பற்றுச்சீட்டொன்றை மேன்முறையீட்டு மனுவுடன் இணைத்தலும் வேண்டும்.

(2ஆ) உட்பிரிவுகள் (2), (2அ) என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத மேன்முறையீட்டு மனுவொன்று செல்லுபடியாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாகத்தின் 113எ என்னும் பிரிவைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113எ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2அ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிமதிப்பீடொன்றின் தொகைக்கெதிராக (1)ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றை முன்வைக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒவ்வொன்றும், (அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் ஏற்கனவே அவ்வாறு செய்திருந்தாலன்றி) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தால் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்து எத்த வருமான வரியைக் கழிப்பனவு செய்து அதனை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புமாறு அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் இந்த அத்தியாத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்டதோ அந்த வருமானவரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, அத்தகைய மதிப்பீடு பற்றிய அறிவித்தலின் தேதிவரை திரண்ட 113ஏ என்னும் பிரிவின் கீழான ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அனுப்புகையின் எண்பிப்பாக பற்றுச்சீட்டொன்றை மேன்முறையீட்டு மனுவுடன் இணைத்தலும் வேண்டும்.'

(2ஆ) உட்பிரிவுகள் (2) (2அ) என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத மேன்முறையீட்டு மனுவொன்று செல்லுபடியாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 117ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்—

"(3அ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிமதிப்பீட்டுத் தொகைக்கு எதிராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றை முன்வைக்கும் ஒவ்வோராளும் (அத்தகைய ஆள் ஏற்கனவே அவ்வாறு

செய்திருந்தாலன்றி) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டின் அடிப்படையில் அத்தகைய ஆளினால் செலுத்தற்பாலதான வரித் தொகையை அதன்மீது வரிமதிப்பீடு பற்றிய அத்தகைய அறிவித்தலின் தேதியன்றுவரை திரண்ட ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவிற்கான எண்பிப்பாக பற்றுச் சீட்டொன்றை மேன்முறையீட்டு மனுவுடன் இணைத்தலும் வேண்டும்:

ஆயினும், ஆணையாளர் தலைமையதிபதி, வரிமதிப்பீடு பற்றிய அத்தகைய அறிவித்தலின் நேரத்தில் அல்லது அந்நேரமளவில் மேன்முறையீட்டாளர் அனுபவித்த பாரதூரமான நிதி நெருக்கடி காரணமாக அல்லது வேறு நியாயமான காரணத்தினால் மேன்முறையீட்டாளர் அத்தகைய வரியையும் தண்டத்தையும் செலுத்துவதிலிருந்து தடைசெய்யப்பட்டார் என திருப்தியுறுவதன்மீது, அத்தகைய வரியினதும் அதன்மீது கொடுப்பனவின் தேதிவரை திரண்ட தண்டத்தினதும் கொடுப்பனவிற்கு கால நீடிப்பொன்றை அளிக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க, இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, அத்தகைய வரியினதும் அதன்மீது கொடுப்பனவுத் தேதிவரை திரண்ட தண்டத்தினதும் கொடுப்பனவின் எண்பிப்பாக அத்தகைய நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் கொடுத்துதவப்பட்ட பற்றுச்சீட்டொன்றை மேன்முறையீட்டு மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "இரண்டாம், மூன்றும் உட்பிரிவுகளின் ஏற்பாட்டுக்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "இரண்டு, (3), (3அ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ii) ஆம் பந்தியில் "இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழான வரியின்" என்பதிலிருந்து "அப்பந்தி முடிவடையும்" என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாக, பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழான வரியின் அத்தகைய காலாண்டுக் கட்டுப்பணம் தொடர்பில் அத்தகைய ஆள் வரியின் அத்தகைய காலாண்டுக் கட்டுப்பணம் எவ்வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் போமதியாக, வந்ததோ அந்த வரிமதிப்பீட்டாண்டு

(அ) 1991 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஒரு வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டின் முடிவை உடனடுத்துவரும் நவம்பர் முப்பதாம் நாள் வரையும்; அத்துடன்

(ஆ) 1991 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒரு வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, அவ் வரிமதிப்பீட்டாண்டின் முடிவை உடனடுத்துவரும் செத்தெம்பர் முப்பதாம் நாள்வரையும்,

ஏதேனும் தண்டம் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 151ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அல்லது 92(5) ஆம் பிரிவு அல்லது 93 ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அல்லது 92(5) ஆம் பிரிவு அல்லது 92அ(1) ஆம் பிரிவு அல்லது 93 ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அல்லது 92(1) ஆம் பிரிவு அல்லது 92அஅ ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அல்லது 92(1) ஆம் பிரிவு அல்லது 92 அ(1) ஆம் பிரிவு அல்லது 92அஅ என்னும் பிரிவு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பந்தியில் அவ்வுட்பந்தியின் (அ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) 1991 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கு ஏதேனும் மாகாண சபை எந்த மாகாணத்திற்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த மாகாணத்தினுள் எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் கொண்டு நடாத்தப்படும் மொத்த விற்பனை வரவு தொடர்பிலான ஏதேனுமொரு கருமமாயின், அத்தகைய ஆணையாளர் அத்தகைய மொத்த விற்பனை வரவை ஆய்ந்தறிவதனை இயலச் செய்வதற்கு அவசியமானதென ஆணையாளர் தலைமையதிபதி கருதக்கூடியவாறான அத்தகைய ஓர் அளவுக்கு அத்தகைய மாகாண சபையின் வருமானவரி ஆணையாளருக்கு.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக "மொத்த விற்பனை வரவு" என்னும் சொல்லமைப்பு 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (த) என்னும் பந்தியால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருக்கும்.".

35. பின்வரும் பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 161அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 161அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.

"வியாபார வளவுகளில் தேடுகை செய்வதற்குள்ள தத்துவம்.

161அ. (1) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதன் சார்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரான உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலர் பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்யலாம்:—

(அ) எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் இடத்தில் அல்லது கட்டிடத்தில் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, உட்சென்று பரிசோதனை செய்யலாம்;

(ஆ) ஏதேனும் கணக்குப் புத்தகம், பதிவேடு இடாப்பு அல்லது வேறு ஆவணம் காணப்படக்கூடிய ஏதேனும் கொள்கலனைத் திறந்து பரிசோதனை செய்யலாம்; அத்துடன் அதன்கண் காணப்படும் பொருட்களின் பொருட்பட்டியலொன்றைத் தயாரிக்கலாம்;

(இ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணப்படும் ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, பதிவேட்டை, இடாப்பை, அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்யலாம்; அத்துடன் அதன் பிரதிகளை எடுக்கலாம் அல்லது அதிலிருந்து பிரித்தெடுத்தல்களைச் செய்யலாம்;

(ஈ) அத்தகைய ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, பதிவேட்டை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தை உடைமையிலெடுக்கலாம் அல்லது அதன்மீது அடையாளக்குறிகளை இடலாம்;

(உ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணப்பட்ட காசை எண்ணலாம் என்பதுடன் உடனடியாக அதன் பதிவொன்றையும் செய்யலாம்;

(ஊ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் அவர் காணும் எவரேனும் ஆளை, இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் கருமம் தொடர்பில் கொடுப்பதற்கு அவரது தத்துவத்தில் உள்ளவாறான அத்தகைய தகவல்களைக் கொடுக்குமாறு தேவைப்படுத்தலாம்;

(எ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் அவர் காணும் எவரேனும் ஆளை, இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் கருமம் தொடர்பில் பொருத்தமானதென அவர் கருதுகின்றவாறு தனியாகவோ அல்லது வேறு எவரேனும் ஆளின் முன்னிலையிலோ பரிசோதனை செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஏதேனும் பங்குடைமையிலிருந்து ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, பதிவேட்டை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தை தம் உடைமையில் எடுக்குமிடத்து, அத்தகைய அலுவலர் தமது உடைமையில் எடுத்துள்ள புத்தகத்தை பதிவேட்டை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தைக் குறிப்பிட்டு குறிப்பறிக்கையொன்றை விடயத்துக்கேற்ப அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்குதல் வேண்டும்.

(3) எவரேனும் அலுவலரால் (1)ஆம் உட்பிரிவின் கீழ் தமது உடைமையில் எடுக்கப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், பதிவேடு, இடாப்பு அல்லது வேறு ஆவணம் அத்தகைய புத்தகத்தை, பதிவேட்டை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்வதற்கு அல்லது அத்தகைய புத்தகம், பதிவேடு, இடாப்பு அல்லது வேறு ஆவணம் எந்த ஆளுக்குரியதோ அந்த ஆளுக்கெதிராக, வழக்கு நடவடிக்கை தொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவரை அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

"பொருள்" என்பது 161 ஆம் பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவு, "ஆதனம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

""மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையின்கீழ் மாகாணமொன்றுக்குத் தாபிக்கப்பட்ட ஏதேனும் மாகாண சபை என்று பொருள்படும்.".

37. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 நவம்பர் 14 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 14(அ) என்னும் உட்பிரிவுக்கு இச்சட்டத்தின் 5ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவம்பர் 29 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 6(2)ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவம்பர் 29ஆம் தேதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஊ என்னும் பிரிவுக்கும் 17எ என்னும் பிரிவுக்கும் முறையே இச்சட்டத்தின் 8ஆம் பிரிவாலும் 9ஆம் பிரிவாலும் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவம்பர் 29ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 (3ஆஆ) என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 17ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவம்பர் 29ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 (1இ) என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 21ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 நவம்பர் 29 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

38. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.